**அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

**ஊடக வெளியீடு**

---

**11 ஒக்டோபர் 2016**

# அவுஸ்திரேலியாவின் மாதர் மற்றும் மகளிருக்கான ராஜதந்திரத் தூதுவரினால் உள்ளுராட்சிப் பிரிவில் மகளிருக்கு ஆதரவு வழங்கும் புதிய திட்டம் ஆரம்பம்

அவுஸ்திரேலியாவின் மாதர் மற்றும் மகளிருக்கான ராஜதந்திரத் தூதுவர் திருமதி நட்டாசா ஸ்ரொட் டெஸ்போயா, உள்ளுராட்சி பிரிவில் மாதர் பிரதிநிதித்துவத்திற்கான புதிய கோட்டாவிற்கு ஆதரவு வழங்கவென அவுஸ்திரேலிய நிதியுதவி பெற்ற திட்டம் ஒன்றை இன்று ஆரம்பித்துள்ளார்.

''இலங்கையில் முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ராஜதந்திரத் தூதுவர் ஸ்ரொட் டெஸ்போஜா, கருத்து வெளியிடுகையில், ''மகளிர் தலைமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதற்கு அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டுக் கொள்கையிலும் கடல்கடந்த நாடுகளுக்கான உதவித் திட்டங்களிலும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது'' என்று கூறினார்.

''பெண்களின் விசேடமான எண்ணக்கருக்கள், ஆற்றல்கள் மற்றும் முதன்மைப்படுத்தப்பட்ட விடயங்களானது, அவர்களின் வாழ்க்கை அனுபவங்களினூடாகப் பெறப்பட்டவைகளாகும். இவையனைத்தும் ஆண்களின் அனுபவங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டவை'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் என்பன இணைந்து அடுத்த 12 மாதங்களில் மேற்கொள்ள இருக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களாக பெண்களை இணைத்துக்கொள்வதன் முக்கியத்துவத்திற்கு பொதுமக்களின் விழிப்புணர்ச்சியை அபிவிருத்தி செய்யவது இலக்காகக் கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் உள்ளுராட்சி தேர்தலையடுத்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு பயிற்சி வழங்குதல், பெண் அங்கத்தவர் குழுவினரின் கடமைகளுக்கு ஆதரவு வழங்குதல், மாதர் பிரதிநிதிகள் எதிர்நோக்கும் தடைகளை நீக்குவதற்கு அரசியல் கட்சிகளுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல் என்பனவும் அடங்கும்.

''இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பிரைஸ் ஹற்செஸன் தகவல் தருகையில், பெண் அங்கத்தவர்களின் கோட்டா சம்பந்தமாக அரசியல்

கட்சிகளுக்கிடையில் நல்விளக்கத்தை உருவாக்குதல், பெண் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கவென முற்றிலும் ஆண்களைக் கொண்ட கட்சித் தலைவர்களின் வலையமைப்பை உருவாக்குதல் என்பனவும் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்'' என்று கூறினார். அதிகாரத்தையும், செல்வாக்கையும் கொண்ட பதவிகளை வகிக்கும் அதிக எண்ணிக்கையான ஆண்கள் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு உதவுவது முக்கியமானதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.